# 3 பெரிய இறைவாக்கினர்

எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினரை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்பதை முதலாம் பாடத்தில் கற்றமை நினைவிலிருக்கும். அவர்கள் பெரிய, சிறிய இறைவாக்கினர்களாவர். இப்பாடத்தின் வழியாக பெரிய இறைவாக்கினர் மூவரைப் பற்றி நீங்கள் கற்று அறிந்து கொள்ளலாம். அவர்கள்,

1. எசாயா
2. எரேமியா
3. எசேக்கியேல் என்பவர்கள் ஆவர்.

## இறைவாக்கினர் எசாயா



படம் 3.1 - இறைவாக்கினர் எசாயா

எசாயா என்ற பெயரின் அர்த்தம் ''இறைவன் மீட்கிறார்'' என்பதாகும். இவர் கி.மு. 8 ஆவது நூற்றாண்டில் வாழ்ந்தவர். எசாயா இறைவாக்கினரின் தந்தையின் பெயர் ஆமோஸ் ஆகும்.

## இறைவாக்கினர் எரேமியா



படம் 3.2 இறைவாக்கினர் எரேமியா

“இறைவன் உயர்த்தியுள்ளார்” என்பதே எரேமியா என்ற பெயரின் அர்த்தமாகும். இவர் கி.மு. 7 - 6 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராவார். இறைவாக்கினர் எரேமியாவின் தந்தையின் பெயர் ஹில்கியா. இவர் ஒரு குரு ஆவார்.

## இறைவாக்கினர் எசேக்கியேல்



படம் 3.3 இறைவாக்கினர் எசேக்கியல்

“ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்” என்பதே எசேக்கியேல் என்ற பெயரின் அர்த்தமாகும். இவர் கி.மு. 6 ஆவது நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார். அவரது தந்தையின் பெயர் பூசி ஆகும். இவர் பாபிலோனியாவிலிருந்து இஸ்ராயேல் மக்களுக்கு இறைவனின் செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்.



இலவச விநியோகத்திற்காக

## இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பு

உசியா அரசன் மறைந்த ஆண்டில், மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன்; அவரது தொங்கலாடை கோவிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேல் சேராபீன்கள் சூழ்ந்து நின்றனர்; ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன; ஒவ்வொருவரும் இரண்டு இறக்கைகளால் தம் முகத்தை மூடிக் கொண்டனர்; இரண்டு இறக்கைகளால் தம் கால்களை மூடி மறைத்தனர்; மற்ற இரண்டால் பறந்தனர். அவர்களில் ஒருவர் மற்றவரைப் பார்த்து ‘‘ படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர்; மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது’’ என்று உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தார். கூறியவரின் குரல் ஒலியால் வாயில் நிலைகளின் அடித்தளங்கள் அசைந்தன; கோயில் முழுவதும் புகையால் நிறைந்தது. அப்போது நான் : ‘‘ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்; தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்; படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே.’’ என்றேன். அப்போது சேராபீன்களுள் ஒருவர் பலிபீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து அதைத் தம் கையில் வைத்துக் கொண்டு என்னை நோக்கிப் பறந்து வந்தார். அதனால் என் வாயைத் தொட்டு ‘‘இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது’’ என்றார். மேலும் ‘‘யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?’’ என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு ‘‘இதோ நானிருக்கின்றேன். அடியேனை அனுப்பும்’’ என்றேன்.

(**எசா** 6: 1 - 8)

இவ்வாறாக இறைவாக்கினர் எசாயா இறைவனின் செய்தியை இஸ்ரேயலருக்கு எடுத்துச் செல்லும் அழைப்பைப் பெற்றார்.

இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பைப் பார்க்கும்போது, ஆலயம் எனப்படுவது இறைவனின் பிரசன்னம் உள்ள தூய்மையான மாளிகை என்பது தெளிவாகின்றது. ஆகவே ஆலயத்தை ஆராதனைக்குரிய ஓர் இடமாகப் பாதுகாக்க வேண்டும். அதே போன்று ஆலயப் பணிகளில் ஈடுப்பட்டிருக்கையில் ஆலயத்தின் புனிதத்துவம் பாதுகாக்கப்படும் விதத்தில் செயலாற்ற வேண்டும். எனவே

- ஆலயத்தினுள் நுழையும்போது இரு முழங்கால்களையும் மடித்து சிரம் தாழ்த்தி நற்கருணைநாதரை ஆராதிக்க வேண்டும்.
- ஆலயத்துள் இங்குமங்கும் ஓடித் திரியக் கூடாது.
- ஆலயத்துள் சத்தம் செய்தல், கதைத்தல் கூடாது.
- ஆலயத்துள் உணவு உண்ணல், பானங்களை அருந்துதல் கூடாது.
- ஆலயத்துக்குச் சுத்தமாக வர வேண்டும்.

இறைவாக்கினர்கள் தாம் வெளிப்படுத்த வேண்டிய இறை செய்தியை அறிவிக்கும்போது தலைமைத்துவத்துடன் செயற்பட வேண்டியவர்களாக இருந்தனர். இன்று திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களாகிய உங்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தலைமைத்துவத்துடன் செயற்படும்போது எமக்குள் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது,

- ஆன்மீகச் செயல்களில் வளர்தல்.
- சவால்களை எதிர்கொள்ளல்
- பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளல்
- குழுவாகச் செயலாற்றுதல்
- இயேசுவுக்காகச் சாட்சி பகர்தல்
- பணிவாழ்வுக்கு அர்ப்பணித்தல் என்பனவாகும்.


இலவச விநியோகத்திற்காக

## செயற்பாடு

1. பெரிய இறைவாக்கினர்கள் மூவரின் பெயர்களை எழுதி, அவற்றின் அர்த்தத்தையும் அவர்கள் வாழ்ந்த காலத்தையும் அவர்களின் தந்தையர்களின் பெயர்களையும் பட்டியற்படுத்துக.
2. ஆலயத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாப்பதற்கு உங்களால் செய்யக் கூடிய 5 செயற்பாடுகளை எழுதுக.
3. தலைமைத்துவப் பண்புகள் 5 எழுதுக.
4. உங்கள் பங்கில் உங்களால் செய்யக்கூடிய 5 பணிகளை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

ö£õÖ¨¦Pø Í HØÖa ö\¯Ø£k [PÒ.